TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102090

1. District மாவட்டம்: Thanjavur PS காவல்நிலையம்: V&AC Year ஆண்டு: 2018 FIR No. முதஅ எண்: 07/2018 Date நாள்: 22/06/18

2. (i) Act சட்டம்: 7 of Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்:

3. (a) Occurrence of Offence Day: குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 2016 [illegible] Date to நாள் வரை: 7.6.18 & 20.6.2018/08.20hrs
Time Period நேர அளவு: Time from நேரம் முதல்: Time to நேரம் வரை:
(b) Information Received at PS. Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம்: 22/6/2018 - 11.00hrs
(c) General Diary Reference: Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம்: FIR registered 16.00hrs

4. Type of Information: Written/ Oral: தகவலின் வகை: எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 12 km North East Thanjavur West P.S
Beat Number: முறைக் காவல் எண் (b) Address: முகவரி & Karthick Lodge, Thergu Alangam Old Bus Stand, Thanjavur
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S: இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District: மாவட்டம்

6. Complainant /Informant (a) Name: குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் J. Antonysamy (b) Father's/ Husband's Name: தந்தை / கணவர் பெயர் s/o. Joseph
(c) Date / Year of Birth: நாள் / பிறந்த ஆண்டு 4/4/2016 (d) Nationality: நாட்டினம் (e) Passport No.: வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue: வழங்கப்பட்ட நாள் Place of Issue: வழங்கப்பட்ட இடம்
(f) Occupation: தொழில் (g) Address: முகவரி No. 45, Lakshmirajapuram Palliakragaram, Vennaru Post Thanjavur

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Jothi Mahalingam, Inspector of police, West Police Station Thanjavur

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் [illegible] after Preliminary Enquiry done FIR [illegible] registered!

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான், 22.06.2018ம் தேதி காலை 11.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.J.அந்தோணிசாமி, த/பெ.ஜோசப், 45, லெட்சுமிராஜபுரம், பள்ளி அக்ரஹாரம், வெண்ணாறு போஸ்ட், தஞ்சாவூர் என்பவர் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், J.அந்தோணிசாமி, த/பெ.ஜோசப், 45, லெட்சுமிராஜபுரம், பள்ளி அக்ரஹாரம், வெண்ணாறு போஸ்ட், தஞ்சாவூர். பெறுநர், உயர்திரு லஞ்ச ஒழிப்பு அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், தஞ்சாவூர். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் தஞ்சாவூரில் JCB மற்றும் லாரி வைத்து விவசாய வேலைகளுக்கு வாடகைக்கு விட்டும், மேலும் செங்கல், ஜல்லி வியாபாரம் செய்து வருகிறேன். நான் மேற்படி தொழில் செய்வதற்காக தஞ்சாவூர் மேலவீதயைச் சேர்ந்த பாரதி பைனான்ஸ் உரிமையாளர் சந்திரன் என்பவரிடம் இருந்து கடந்த 2016ல் பல்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.10,50,000/- கடனாக பெற்றிருந்தேன். சந்திரனிடம் பெற்ற கடனுக்கு ஈடாக (1) என்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 22/6/2018

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் [signature] 22/6/18

CR. TAMIL SELVI,

Name: பெயர் ....... Inspector of police

Rank: நிலை ........................No. எண்

V&AC, Thanjavur

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
22/6/18

அக்கா சுலோச்சனாமேரி பெயரில் உள்ள சிறுபுலியூர் கிராமத்தில உள்ள 35 செண்ட் நிலத்திற்கான பத்திரத்தையும், (2) எனது நண்பர் விஸ்வநாதன் பெயரில் உள்ள மணக்கரம்பை ஸ்ரீராகவேந்திர நகர் விஸ்தரிப்பில் உள்ள காலிமனைப் பத்திரத்தையும், (3) நான் கிரயம் பெற்று, பதிவு செய்யப்படாமல் ஜெயந்தி என்பவர் பெயரில் உள்ள பள்ளியக்கிரகாரம் எம்.ஜி.ஆர். நகரில் உள்ள காலிமனைப் பத்திரத்தையும், (4) எனது மைத்துனர் சின்னப்பன் பெயரில் உள்ள உதாரமங்கலத்தில் உள்ள 1 ஏக்கர், 37 செண்ட் நிலத்திற்கான பத்திரத்தையும் கொடுத்தும், மேற்படி பத்திரங்களில் ஜெயந்தி மற்றும் விஸ்வநாதன் ஆகியோர்களின் பெயரில் இருந்த மனைகளை ரிஜிஸ்டர் ஆபிசில் MOD செய்து கொடுத்திருந்தோம். பிறகு ரூ.10,50,000/-ம் கடனுக்கு வட்டியாக ரூ.84,000/-ம், அசல் ரூ.10,50,000/-யும் சேர்த்து கூடுதல் தொகை ரூ.11,34,000/-த்தை பல்வேறு தேதிகளில் தவணை முறையில் செலுத்திவிட்டேன். பின்னர் MOD செய்து கொடுத்ததை வரவு செய்து கொடுக்கும்படியும், ஈடாக கொடுத்த அசல் பத்திரத்தினை கேட்டபோது இன்னும் ரூ.10,50,000/- கொடுத்தால்தான் ஈடாக கொடுத்த பத்திரங்களை கொடுக்கமுடியும் என மிரட்டினார். மேலும் MOD-ஐ ரத்து செய்து கொடுப்பேன் என்றும் சொல்லிவிட்டார். நான் இதுதொடர்பாக சந்திரன் மீது நடவடிக்கை எடுத்து, நான் கொடுத்த அசல் பத்திரங்களை பெற்றுத்தரும்படியும், MOD செய்து கொடுத்ததை வரவு செய்துக் கொடுக்கவும் கோரி 06.02.2018ல் தஞ்சாவூர் காவல் கண்காணிப்பாளருக்கு மனு கொடுத்தேன். அந்த மனு தஞ்சாவூர் நகர மேற்கு ஆய்வாளர் திரு.ஜோதிமகாலிங்கம் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, ஆய்வாளர் மனுதாரரான என்னையும், எதிர்மனுதாரர் சந்திரனையும் ஜுன் 2018 முதல் வாரத்தில் அழைத்து விசாரணை செய்தார். விசாரணையின்போது என்னிடமிருந்து ரூ.1,00,000/-த்தை பெற்று சந்திரனிடம் கொடுத்தார். பின்னர் நான் சந்திரனிடம் கொடுத்திருந்த பத்திரங்களை வாங்கி வைத்துக்கொண்டார். சந்திரனிடம் பத்திரத்தை கொடுத்துவிட்டேன் என்றும், MOD-ஐ விரைவில் ரத்து செய்து கொடுக்கிறேன் என எழுதி வாங்கிக்கொண்டார். என்னிடம் சந்திரனிடமிருந்து 4 பத்திரங்களையும் பெற்றுக் கொண்டேன் என்று எழுதி கொடுக்கச் சொன்னார். நானும் எழுதிக் கொடுத்தேன். என்னிடம் பத்திரங்களை ஆய்வாளர் தரவில்லை. பத்திரங்களை ஆய்வாளர் திரு.ஜோதிமகாலிங்கமே வைத்துக்கொண்டார். பிறகு என்னை ஆய்வாளர் தனியாக அழைத்து, உனக்கு எவ்வளவு பெரிய சகாயம் செய்து கொடுத்துள்ளேன் எனவும் கோர்ட்டுக்கு போனல் என்ன செலவாகும் என்று கூறிவிட்டு எனக்கு லஞ்சமாக ரூ.3,00,000/- கொடு என கேட்டார். நான் அதற்கு அப்போது பணம் இல்லையென கூறினேன். ஏற்பாடு செய்துக்கொண்டு வரும்படி கூறினார். பலமுறை என்னிடம் பணம் என்னாச்சு என கேட்டார். நான் ஏற்பாடு செய்து வருகிறேன் என்று

சொன்னேன். பின்னர் பணம் கிடைக்காததால் ஆய்வாளரிடம் பத்திரத்தை கொடுங்கள் அதனை அடகு வைத்துவிட்டு வைத்து பணம் வாங்கிவந்து கொடுக்கிறேன் என சொன்னேன். அதற்கு அவர் ஏதாவது ஏற்பாடு செய்துக்கொண்டு வா என கூறினார். அதன்படி நான் 07.06.2018 தேதியில் ரூ.50,000/- ஏற்பாடு செய்துக்கொண்டு ஆய்வாளர் வரச்சொன்ன பழைய பஸ் ஸ்டாண்டு தெற்குஅலங்கம் கார்த்திக் லாட்ஜிக்கு அவர் தங்கியிருந்த அறைக்குச் சென்று பத்திரத்தை கேட்டேன். பணம் என்னாச்சு என கேட்டார். அப்போது ரூ.50,000/- இருப்பதாக கூறிக் கொடுத்தேன். பணம் ரூ.50,000/-ஐ வாங்கிக்கொண்டு 4 பத்திரத்தில் ஒன்றை மட்டும் கொடுத்தார். மீதி மூன்று பத்திரங்களை அவரே வைத்துக்கொண்டு மீதிபணம் ரூ.2,50,000/- கொடுத்துவிட்டு மூன்று பத்திரங்களை வாங்கிச் செல்லும்படி சொன்னார். 20.06.2018ந் தேதி காலை 8.30 மணியளவில் அவருடைய 94981-59291 என்ணிலிருந்து என் செல் நம்பர் 9843810039க்கு தொடர்பு கொண்டு பணம் கேட்டார். பணம் ஏற்பாடு செய்ய முடியவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் கொஞ்சம் கொஞ்சமாக பணத்தை எப்போது வேண்டுமானலும் கொடுத்துவிட்டு, ஒவ்வொரு பத்திரமாக வாங்கிக் கொண்டு செல் என்று சொன்னார். ஆய்வாளர் திரு.ஜோதிமகாலிங்கம் கேட்ட ரூ.2,50,000/-த் கொஞ்சம், கொஞ்சமாக கொடுத்து மீதமுள்ள 3 பத்திரத்தை வாங்க எனக்கு விருப்பமில்லை. எனவே அவர் கேட்ட லஞ்ச பணத்தில் ஒரு பகுதி தொகை ரூ.50,000/- ஏற்பாடு செய்து கொண்டு வந்துள்ளேன். மேற்படி சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை தருவதற்காக ரூ.2,50,000/- லஞ்சமாக கேட்ட ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் SP-க்கு 06.02.2018 அனுப்பிய புகார் மனு நகல் மற்றும் ஏற்கனவே ஆய்வாளர் என்னிடம் சந்திரனிடமிருந்து பெற்றுக்கொடுத்த ஒரு பத்திரத்தின் நகலை இணைத்துள்ளேன். இப்படிக்கு Sd/-.J.Antonisamy, 22/6/2018.

Sir, Received this petition on 22.06.2018 at 11.00 hrs and copy of the same is sent to the SP/SR, DVAC, Chennai, for requesting PE. Sd/-. R.Tamilselvi, 22/06/18, Inspector of Police, V&AC, Thanjavur.

After receiving order from the SP/SR, DVAC, Chennai to conduct Preliminary Enquiry in PE.187/2018/POL/TH, dated 22.06.2018 and then registered this PE in Thanjavur V&AC PE No.6/2018/POL/TH on 22.06.2018 at 12.30 hrs. Sd/-. R.Tamilselvi, 22/06/18, Inspector of Police, V&AC, Thanjavur.

முதல்நிலை விசாரணையில் எதிரி மற்றும் மனுதாரர் குறித்து ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது, மேலும் எதிரி புகார்தாரரிடம் பணம் கையூட்டாக கேட்டுள்ளதை உறுதிப்படுத்த புகார்தாரர் ஆஜர் செய்த செல்போனிலிருந்த உரையாடல்களை கேட்கப்பட்டது. முதற்கட்ட விசாரணையில் வாதியிடம் எதிரி கையூட்டு கேட்டதற்கான முகாந்திரம் தெரியவந்தது. இதன் விபரம் பற்றி காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களுக்கு தெரிவித்தும், இன்று 22.06.2018ந் தேதி 16.00 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.07/2018 பிரிவு 7 ஊழல் தடுப்புச்சட்டம் 1988 ன்படி வழக்கு பதிவு செய்தேன். Sd/- R.Tamilselvi, 22/06/18, Inspector of Police, V&AC, Thanjavur.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தஞ்சாவூர் @ கும்பகோணம் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல்தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

22/6/18
Inspector/V&AC/Thanjavur